REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மார்கழி 27உ வியாழன் (10—1—57) ★ ★ வெளியீடு: மார்கழி 28உ வெள்ளி (11—1—57) [இதழ் 184

மேலும் ரூ. 12 கோடி பாழடிக்க முடிவு!

★

புதுடில்லி, ஜன. 9—

அடுத்த ஆண்டில், ரூ. 12 கோடி செலவு செய்து, மேலும் 1,80,000 'அம்பர் சர்க்கா'க்கள் உற்பத்தி செய்வ தென முடிவாகியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த நடைமுறை ஆண்டில் 75,000 அம்பர் சர்க்காக் களுக்காக ரூ. 4 கோடி ஒதுக்கப்பட்டதாம்!

மக்கள் இதயத்தைவிட சட்டசபை பெரிதல்ல! பெருமை பெற்றதல்ல!

நமது தேர்தல் ஈடுபாடு, விடுதலைப் போராட்டத்தில் ஒரு புதிய கட்டமே

நிதி தருவோரின் பட்டியல் மக்களின் விடுதலை ஆர்வத்திற்குச் சான்று தரும்

சென்னைக் கடற்கரையில் அண்ணா தெளிவுரை

"மக்கள் உள்ளத்தைவிட சட்டசபை ஒன்றும் பெரிதல்ல; மக்கள் உள்ளத்தில் கழகத்தவர் பெற்றிருக்கும் உயரிய இடத்தை விட சட்டசபை உறுப்பினர் பதவி நிச்சயம் பெருமைக்குரியதல்ல!

"கழகம் தேர்தலில் போட்டியிடுவது, கழகத்தில் உள்ள சிலரது கீர்த்திக்காக அல்ல—கித்தாப்புக்காக அல்ல! திராவிடத்தின் விடுதலைப் போராட்டத்தில் புதியதோர் கட்டத்தையே, கழகம் தேர்தலில் ஈடுபடுவது குறிக்கிறது!

"ஹங்கேரியில் நிகழுவன தேசீய விடுதலை எழுச்சியின் விளைவே என்று பண்டித நேரு கூறுகிறார். அவர் அப்படிக் கூறு முன், புல்கானினையும், குருஷ்சேவையும் நண்பர்களாக வைத்துக் கொண்டுதான்.

"பண்டித நேரு கூறுவது சரியா தவறா என்ற ஆராய்ச்சியில் நான் ஈடுபடத் தயாராக இல்லை; அதற்கு நான் அருகதை அற்றவன்! எனக்கு ஹங்கேரி பற்றித் தெரியாமலிருக்கலாம்; அது ஒன்றும் பெரிய குறை அல்ல; எனக்கு இங்கேயுள்ள சேரிகளைப் பற்றித் தெரியும்—அதுவே போதும் என்று கருதுகிறேன். ஆனால், ஹங்கேரி பற்றி பரந்த கண்ணோட்டமுடையவர்களே ஆராய்ச்சி செய்யட்டும்; ஆனால் அவர்கள்—ஹங்கேரியில் நடைபெறுவது, தேசீய விடுதலைப் போராட்டமா இல்லையா என்பதை ஆராய்கிற அவர்கள், இங்குள்ள சேரிகளை மறந்துவிடுகிறார்கள்.

"பண்டித நேரு, ஹங்கேரியில் நடைபெறுவது தேசீய விடுதலைப் போராட்டம் என்றே கூறியிருக்கிறார். அவர் எதைத் தேசீய விடுதலைப் போராட்டம் என்கிறாரோ, ஒரு தேசீய விடுதலைப் போராட்டத்திற்கான இலட்சணங்கள் என்னவென்று கருதுகிறாரோ, அந்த இலட்சணங்கள் நமது திராவிட நாட்டு விடுதலைப் போரிலும் இருப்பதைக் காணலாம்,"

—இவ்வாறு, சென்னை-திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற திராவிட மாதர்கள் சார்பில் தி. மு கழகத் தேர்தல் நிதி அளிப்பு விழாக் கூட்டத்தில் கருத்துரை வழங்கின அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்து அண்ணா அவர்கள் பேசியதாவது:—

"கரேன்களும் நாகர்களும் நடத்துகிற விடுதலைப் போராட்டத்திற்கும், நாம் நடத்தும் விடுதலைப் போராட்டத்திற்கும் என்ன வித்தியாசம்?

"கரேன்களும் நாகர்களும் பலாத்காரத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்; நாம் மக்களின் பண்பில நம்பிக்கை வைத்திருக்கிறோம்; அவ்வளவுதானே!

"உலகில் இன்று நடைபெறும் விடுதலைப் போராட்டங்கள், பலவற்றின் முறையிலிருந்து மாறுபட்டதே தவிர, நமது போராட்டம் அடிப்படையில் வித்தியாசமுடையது அல்லவே!

"அந்த நமது விடுதலைப் போராட்டத்தின் ஒரு கட்டமதான் நமது தேர்தல் பிரவேசம்.

"வேறுபல நாடுகளில் நடைபெறும் விடுதலைப் போராட்டங்களில் மக்கள் பங்குபெறுவதைப போலத்தான், இங்கும் நமது போராட்டங்களில மக்கள் பங்கு பெறுகிறார்கள். இன்று நாட்டு மக்களிடம் விடுதலை ஆர்வம் மலர்ந்திருப்பதை நாம் காணுகிறோம்.

"இங்கு தேர்தல நிதிக்கென நிதியளித்தவர்கள் எல்லாம் எவர் என்பதை அறிந்தால் இந்த உண்மை விளங்கும்.

'முடி திருத்துவோர் நிதி தந்தார்கள்; உடை வெளுப்போர் தந்தார்கள்; போக்குவரததுத் தொழிலாளர்கள் தந்தார்கள்; தாய்மார்கள் வழங்கினார்கள்—இப்படி, சமுதாயத்தின் பல பிரிவினரும, 'நாட்டுக்கு ஆபத்து வந்துள்ளது, நல்லவர்களே! கழகத் தவரே! இதோ பணம் தருகிறோம், தேர்தல் செலவுகளுக்கு! தேர்தலில் ஈடுபடுங்கள்! வெற்றிவாகை சூடுங்கள்!' என்று வாழ்த்தி, தொகை வழங்கியிருக்கிறார்கள். இப்படி அவர்கள் தங்களது செலவுகளைக் குறைத்துக்கொண்டு கழகத்திற்கு நிதி வழங்குவது, அவர்கள் தரும் நிதி சிறிய தொகையானாலும, அவர்களது விடுதலை ஆர்வத்தைக் காட்டவில்லையா?

"இங்கு தேர்தல் நிதி வழங்கிய ஒரு தோழர் 'தி. மு. க. நிதிக்கு சில ரூபாய் நோட்டுகளைத் தருவதுடன், ஓட்டுக்களையும் தருவோம்,' என்று கூறினார்—(டி. யு. சி. எஸ். தொழிலாளர் சார்பில் நிதியளித்தவர் கூறினார்).

'நோட்டுக்களையும் தந்து, ஒரு கழகத்திற்கு ஓட்டுக்களையும் மக்கள் தருகிறார்கள். அகில இந்தியாவில் மட்டும் அல்ல—அகில உலகத்திலும், இப்படி நமது கழகத்திற்கு மக்கள் தருவதைப் போன்று வேறு எந்தக் கட்சிக்குத் தருகிறார்கள்? காட்ட முடியுமா?"

(பேச்சு முடியவில்லை; தொடர்ந்துவெளிவரும்)

★

நிகழ்ச்சி

சென்னை, ஜன. 10—

திராவிடத் தாய்மார்கள் சார்பில், தி மு. கழகத் தேர்தலுக்கு நிதியளிக்க நேற்று மாலை, திருவல்லிக்கேணிக் கடற்கரையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

எண்ணற்ற தாய்மார் உட்பட ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான மக்கள், கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டத்தை ஒட்டி, திருவல்லிக்கேணியின் முக்கியமான சாலைகள் எல்லாம், கழகக் கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தன.

கடற்கரையில் அமைந்திருந்த மேடையில், மின்சார ஒளிவிளக்காலான 'உதய சூரியன்' பிரகாசித்துக் கொண்டிருந்தான்.

கூட்டத் துவக்கத்தில் மல்லிகா, சுலோச்சனா என்ற இரு சிறுமிகள் இயக்கப் பாடல்கள் பாடி மகிழ்வித்தனர்.

தோழியர் மோகனா முன்மொழிய, தோழியர் வள்ளியம்மையார் வழிமொழிய கூட்டத்திற்குத் திருமதி இராசம் அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர் கண்ணதாசன் சிறிது நேரம பேசினார்.

அடுத்து துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் சிறிது நேரம் பேசியதும், பொதுச்செயலாளர் இரா நெடுஞ்செழியன் அவர்கள் கழகம தேர்தலில் ஈடுபடுவது குறித்தும், மக்களின் கடமை குறித்தும், மாற்றுக் கட்சியினரின் பிரச்சாரம் குறித்தும் அரியதோர் உரை நிகழ்த்தினர்.

அடுத்தாற்போல, திராவிடத் தாய்மார்கள் சார்பாக தேர்தல் நிதிக்கு ரூ. 1,011; சர்க்கார் பஸ் போக்குவரத்துத் தொழிலாளர் சார்பில் ரூ. 333; டி.யூ.சி.எஸ். தொழிலாளர் சார்பில் ரூ. 45; டாக்டர் நடேசன் மன்றச் சார்பில் ரூ. 40; சென்னை மவுண்ட்ரோடு 'கிளென் அண்டு பெயரால்,' நிறுவன ஊழியர்கள் ரூ. 32-2-0; முத்தியாலுப்பேட்டை தி. மு. கழகம் ரூ. 100; மவுண்ட்ரோடு நடைபாதை வியாபாரிகள் சார்பில் ரூ. 14—என்று பல்வேறு மன்றங்கள், கழகங்கள் சார்பாக தேர்தல் நிதியாக அண்ணா அவர்களிடம் அளிக்கப்பட்டது (விபரங்கள் பின்னால்).

திராவிடத் தாய்மார் சார்பாக ரூ. 1,011-ம், டாக்டர் நடேசன் மன்றச் சார்பாக ரூ. 40-ம் முறையே தோழியர் அலமேலு அப்பாதுரை அவர்களாலும், பன்மொழிப் புலவர் அப்பாதுரை அவர்களாலும் அளிக்கப்பட்டன.

ஒரு ஹார்பர் தொழிலாளத் தோழர் தி. மு. க. தேர்தல் நிதிக்கென ரூ. 1 அன்பளிப்பாகத் தந்தார்.

மூன்று குழந்தைகளுக்கு அண்ணா அவர்கள் பெயரிட்டு, பெற்றோரை மகிழ்வித்தார்கள்.

பின்னர் அண்ணா அவர்கள், நமது தேர்தல் பிரவேச நோக்கம் குறித்தும், மக்கள் கடமை குறித்தும் அரியதோர் கருத்துரை வழங்கினார்கள்.

அண்ணா, இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன் ஆகியோருக்கு பல மன்றங்கள், கழகங்கள் சார்பில் ஏராளமான கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டதுடன், அண்ணா, நெடுஞ்செழியன், நடராசன் ஆகியோரது துணைவியர்களுக்கும், தாய்மார் சார்பாக சட்டைக்கான கைத்தறித் துணிகள் அளிக்கப்பட்டன.

தோழர் கண்ணதாசன் அவர்கள் கூட்டத்தில் உண்டியல் எடுத்து ரூ. 90 வரை வசூல் செய்தது குறிப்பிடத்தகுந்ததாகும்.

தலைவர் முடிவுரையுடன் நன்றி கூறப்பட்டு கூட்டம் இனிது முடிவுற்றது. (ந-நி.)

மக்களின் கருத்து வாகை சூடுகிறது

பிரிட்டிஷ் பிரதமர் ஈடன் ராஜிநாமா

லண்டன், ஜன. 9—

பிரிட்டிஷ் பிரதமர் அந்தோணி ஈடன் இன்று தமது பதவியை இராஜிநாமாச் செய்திருக்கிறார்.

எலிசபெத் இராணியை பக்கிங்காம் அரண்மனையில் சந்தித்து, தனது இராஜிநாமாவை அவர் தந்தாராம்.

அரண்மனையிலிருந்து வெளியிடப்பட்ட அறிவிப்பு ஒன்று, அந்தோணி ஈடனது பிரதமர் பதவி இராஜிநாமா இராணியால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்று கூறுகிறது.

உடல் நலக் குறைவே இராஜிநாமாவுக்குக் காரணம் என்று அவர் கூறியபோதிலும், அவரது இராஜிநாமாவுக்கான உண்மைக் காரணம், சூயஸ் விவகாரத்தில் அவர் நடந்துகொண்ட விதமே என்பது உலகறிந்ததாகும்.

அடுத்தவர் யார்?

அடுத்த பிரதமராக ஆர். ஏ. பட்லர் என்பார் தேர்ந்தெடுக்கப் படலாம் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றனவாம்.

தேர்தல் உண்டா?

மீண்டும் பொதுத் தேர்தல் நடத்துவதுபற்றி பேச்சே இல்லை என்றும் கூறப்படுகிறது.

ஈடன் சர்க்கார்

ஈடன் சர்க்கார் கடந்த 1955 மே திங்களில் நடைபெற்ற தேர்தலின்போது பதவிக்கு வந்தது. ஈடன், 1955 ஏப்ரலில், சர்ச்சில் விலகியதும் பிரதமராகப் பதவி ஏற்றார்.

பிரெஞ்சு ஏகாதிபத்தியப் பிடிவாதம்

அல்ஜீரியாவைக் கைவிடவேமாட்டார்களாம்!

பாரிஸ், சன. 9—

அல்ஜீரியாவைக் கைவிடவேமாட்டார்களாம் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள்!

இந்தக் கொள்கையை, பிரெஞ்சுப் பிரதமர் அறிவித்திருக்கிறாராம்!

பிரெஞ்சு ஆட்சியை எதிர்த்து வட ஆப்பிரிக்கப் பிரதேசத்தில் 26 மாதங்களாக முஸ்லிம் தேசியவாதிகள் போராடிவருகிறார்கள்.

அல்ஜீரியாவில் 85 இலட்சம் முஸ்லிம்களும், 12 இலட்சம் ஐரோப்பியர்களும் இருக்கிறார்கள்.

ஒருவரை ஒருவர் அடக்கி ஆள—சுரண்டி வாழ இயலாத விதத்தில் இரு இனத்தவர்களும் கூடி வாழவேண்டுமென்பதே அல்ஜீரியாவின் பிரச்சினையாகுமாம்!

உடுமலையில் தமிழ் நாடு ம. சோ. கட்சி மாநாடு

தமிழ் நாடு மக்கள் சோஷலிஸ்டுக் கட்சியின் 3-வது மாநாடு சனவரி 20, 21-ம் தேதிகளில் உடுமலையில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 10—1—'57 வியாழன்

இது மட்டும் அறமோ?

மக்களாட்சி முறையின் அடிப்படையை இந்திய அரசியல் சட்டம் ஏற்றுக்கொண்டு இருக்கிறது. அம்மக்களாட்சி முறை நன்கு செயல்படுவதற்கு கட்சி — மாற்றுக் கட்சி அமைப்பு இருந்தாக வேண்டியது இன்றியமையாததாகிறது.

அரசியல் கட்சி ஆட்சிமுறையின் வெற்றிக்கு மாற்றுக் கட்சி இன்றியமையாதது போன்றே, சிறந்ததோர் மாற்றுக்கட்சியை உருவாக்க வேண்டிய அறக் கடமையும் ஆளும் கட்சியான காங்கிரசுக் கட்சிக்கு இருந்துவருகிறது. எனவே, தனக்குள்ள அந்த அறக்கடமையை காங்கிரசுக் கட்சி எந்த எந்த அளவிலும் வகையிலும் நிறைவேற்றிவைக்கிறது என்பது ஆராயத்தக்கது.

பலம் பொருந்திய எதிர்க் கட்சி செயல்படுவதின் மூலம்தான் பாராளுமன்ற சனநாயக முறை வெற்றி பெறக்கூடும் என்பது உண்மையானால், பலம் பொருந்திய எதிர்க்கட்சி செயல்படத் துவங்குகின்ற வரையில் நடைபெற்று வருகின்ற ஆட்சியும், அது வேறு எந்தவகையான ஆட்சி முறையாக இருந்தாலும் இருக்கலாமே அல்லாது, நிச்சயமாக பாராளுமன்ற சனநாயக ஆட்சியாக இருக்கவே முடியாது என்ற உண்மையை, காங்கிரசுக் கட்சியும் ஒப்பியே ஆக வேண்டும்.

பலம் பொருந்திய எதிர்க் கட்சி இடம் பெறாத ஆட்சி முறை எதுவானாலும், அதில் இடம் பெற்று அதிகாரம் செலுத்துகிறவர்கள் எத்தகைய தூயவர்களாக இருந்த போதிலும், அதைப் பாராளுமன்ற ஆட்சி முறையாகக் கொள்ளுவதற்கில்லை.

பலம் பொருந்திய எதிர்க் கட்சி ஏற்பட்டுவிட்டால், குறிப்பிட்ட காங்கிரசுக் கட்சியே என்றும் சிரஞ்சீவியாகப் பதவிப் பொறுப்பில் ஒட்டிக் கொண்டிருக்கக்கூடிய அவல நிலையும் இருக்க முடியாது.

எனவே, பலம் பொருந்திய எதிர்க் கட்சி உருவாவதில் தங்கள் கட்சியினுடைய பதவிப் பிரச்சினையும் அடங்கி இருக்கின்ற காரணத்தால், எதிர்க் கட்சி உருவாவதற்கான உதவி புரிய அதிகாரத்தில் இருக்கின்ற காங்கிரசுக் கட்சி முன்வரக் கூடுமென எவரும் எதிர்பார்ப்பதற்கில்லை. இறக,

மக்கள் அனைவரும் நல்வாழ்வு பெறுவதில், மற்ற எவருக்கும் இல்லாத அளவில் தங்களுக்கு மட்டுமே அக்கறை இருப்பதாகக் காங்கிரசுத் தலைவர்கள் பீத்திக்கொள்ளுகிறார்கள். அது போன்றே பாராளுமன்ற சனநாயக முறையைச் சிறந்த கடைக்காலின்மீது உருவாக்குவதும்கூட தங்கள் கடமைதான என்று, வாய்ப்பு நேரும்பொழுதெல்லாம் காங்கிரசுத் தலைவர்கள் பகட்டாகக் கூறியும் வருகின்றனர்.

இவ்வாறு அவர்கள் வெளிப்படையாகக் கூறிவருவதைக் கொண்டுதான், பாராளுமன்ற சனநாயக வெற்றிக்கு இன்றியமையாத் தேவையாக இருக்கும் பலம்பொருந்திய எதிர்க் கட்சி அமைப்புக்கும் பாடுபட்டாக வேண்டிய அறக்கடமை காங்கிரசுக் கட்சிக்கு இருக்கிறது என்று மற்றவர்களைப் போன்று நாம் சொல்ல வேண்டியவர்களாகிறோம்.

காங்கிரசுக் கட்சித் தலைவர் தேபர் பத்திரிகை நிருபர்களிடம் காங்கிரஸ் நிலைமையைப் பின்வருமாறு விளக்கிக் கூறியுள்ளார்.

"ஜனநாயகம் வெற்றிகரமாக வேலை செய்ய நல்ல ஆரோக்கியமான, பலமுள்ள எதிர்க் கட்சி அவசியம்தான். காங்கிரஸ் தனக்குத்தானே செயற்கை முறையில் எதிர்க் கட்சியை ஏற்படுத்திக்கொள்ள முயற்சி செய்யும் கடமையைப் பெற்றிருப்பதாக நினைக்கவில்லை. நாட்டிலுள்ள படிப்பாளிகள் பலமான எதிர்க்கட்சியின் அவசியத்தை உணர்ந்திருக்கலாம். நாம் எதுசெய்தாலும் மக்களது பகுத்தறிவிற்கு ஏற்றதாக இருக்கவேண்டும். எதிர்க் கட்சியை ஏற்படுத்துவது நல்லதல்ல. மக்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கப் போதிய சந்தர்ப்பமளித்தது. எதிர்க் கட்சிகள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எதிர்க் கட்சியை அமைக்காவிட்டால் அதற்குக் காங்கிரசு என்ன செய்ய முடியும்?"

வெறும வெளிப் பகட்டிற்காக ஒரு எதிர்க் கட்சியைத் துவங்க காங்கிரசுக் கட்சி ஏன் உதவி செய்யக்கூடாது எனக் கேட்டது போலக் கற்பனைச் செய்துகொண்டு, காங்கிரசு கட்சித் தலைவர், அப்படி எதிர்க் கட்சியை ஏற்படுத்துவது கூடாது — அது செயற்கை முறையாகும்—அது பகுத்தறிவிற்கு ஒவ்வாததாகும் என்றெல்லாம் அடுக்கிக்கொண்டே போகிறார்.

ஏதோ விளையாட்டிற்காக ஒரு எதிர்க் கட்சியை உருவாக்க காங்கிரசுக் கட்சி முன்வந்து முயற்சிக்காமல் இருக்கிறதே என்று காங்கிரசு கட்சி மீது சீற்றம் கொள்ளுகிறவர்கள் எவரும் கிடையாது. ஆரோக்கியமான, பலம வாய்ந்த எதிர்க்கட்சி தானாக உருவாவதைக் கெடுக்காமல் இருப்பதின் மூலமாவது எதிர்க் கட்சி ஆக்கம பெற காங்கிரசுக கட்சி உதவ முன்வரக் கூடாதா என்றுதான் எவரும் கேட்கின்றனர்.

உதவி செய்வதில் இருவகை உண்டு. பிறர் தாமாக முயற்சிக்கின்றபொழுது, அவர்கள் முயற்சி வெற்றிபெற ஊக்கமளிப்பது ஒன்று; முயற்சிக்கின்றவர்களே வெற்றி தேடிக் கொள்ளட்டும் என்று, அவர்களுடைய முயற்சிக்கு முட்டுக்கட்டைபோடாமல் இருப்பது மற்றொன்று. இவ்விரண்டு வகையும உதவியின்பாற்பட்டதேயாகும்.

சனநாயகம் வெற்றிகரமாக வேலை செய்வதற்கு; ஆரோக்கியமான — பலம வாய்ந்த எதிர்க்கட்சி இருந்துதான் ஆக வேண்டும் எனத் தாம் மனப்பூர்வமாக நம்பிதான் காங்கிரசுத் தலைவர் கூறுபவராக இருந்தால், சனநாயகம் வெற்றிகரமாகச் செயல்படுவதற்காவன செய்ய முன்வர வேண்டியதும் தனது கடமையாகிறது என்பதை ஒத்துக் கொள்ளவேண்டும். அப்படி ஒப்புக்கொள்ளுவதானால், அவர் குறிப்பிட்டுள்ளபடி ஜனநாயகம் வெற்றிகரமாகச் செயல்படுவதற்குரிய முதல் தேவையாக இருக்கும் எதிர்க்கட்சி ஏற்பாட்டிற்கும், தமது ஒத்துழைப்பைத் தரவேண்டியதும் கட்டாயமாகும் என்பதையும் அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஆனால், காங்கிரசுக் கட்சித் தலைவரோ, அப்படி எதிர்க்கட்சி ஆக்கம் பெறுவதற்கு தாம் உதவுவதை 'செயற்கை முறை' எனச் செப்புகிறார். எதிர்க் கட்சி ஆதிக்கம் பெறுவதற்கான எந்தவித உதவியையும் செய்ய தனது கட்சி தயாராக இல்லை என்பதை காங்கிரசுத் தலைவரே கூறிவிட்டார்.

எதிர்க் கட்சி ஆக்கத்திற்கு காங்கிரசுக் கட்சி உதவுவதென்பது செயற்கை முறையாகும் எனக் கூறினதுடனும் அவர் நின்றுவிடவில்லை. அது பகுத்தறிவிற்குப் புறம்பானது என்றும் தெளிவாகக் கூறியும்விட்டார்.

எதிர்க்கட்சி ஆக்கம் பெறுவதற்கு காங்கிரசுக் கட்சி உதவ முன்வராததில் குற்றமில்லை என்பதை நாம் வாதத்திற்காக ஒப்புக்கொள்ளுவோம். தானாக எதிர்க் கட்சி உருவாவதையாவது கெடுக்க முயறசிக்காது காங்கிரசுக் கட்சி இருக்கிறதா என்பதைப் பார்ப்போம்.

சென்ற பொதுத் தேர்தலின் போது, நமது தமிழகத்தில் காங்கிரசுக்கு எதிராகக் குறிப்பிட்ட எல்லைக்குள் இரண்டு கட்சிகள் காங்கிரசுக் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்டன. அப்பகுதியில் காங்கிரசுக் கட்சி அபேட்சகர்களை, இக் கட்சிகள் தோற்கடிக்கவும் செய்தன.

காங்கிரசுக் கட்சி தோற்று அக்கட்சிகள் வெற்றிபெற்றதின்மூலம, காங்கிரசுக் கட்சியை மக்கள் விரும்பவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. அம்மக்கள் தீர்ப்புக்குத் தலைவணங்கி நடந்துகொள்ளுவதைத்தான் காங்கிரசுக் கட்சி செய்திருக்க வேண்டும. ஆனால் காங்கிரசு எவ்வாறு நடந்து கொள்ள முன்வந்தது?

காங்கிரசு அபேட்சகர்களைத் தோற்கடித்த ஒரு கட்சியின் தலைவருக்குப் பதவி ஆசையைக் காட்டி, அக்கட்சிக்குக் கல்லறை கட்டும பணியைச் செய்ய முன்வந்தது. இரண்டாம முறையும், முன் முறையையே பின்பற்றி இரண்டாவது எதிர்க்கட்சியின் தலைவருக்கும பதவி கொடுப்பதின் மூலம், மற்றொரு எதிர்க் கட்சியையும குழி தோண்டி புதைப்பதில் காங்கிரசுக் கட்சி முழு வெற்றி பெற்றது.

தேர்தலில் மக்கள் தந்தத் தீர்ப்புக்கு மதிப்பு வைத்து நடந்துகொள்ளும் காங்கிரசு இலட்சணம் இதுதான்.

எதிர்க் கட்சி ஆக்கம் பெறுவதற்காகக் காங்கிரசுக்கட்சி ஒத்துழைப்பதென்பது 'செயற்கை முறை'—'பகுத்தறிவிற்கு மாறுபட்டது' என்றெல்லாம அரசியல் அறம் பேசும் காங்கிரசுக் கட்சித் தலைவர், மேற்குறிப்பிட்டுள்ள எதிர்க் கட்சி அழிப்பு ஈனத்தனத்திற்கு என்ன சமாதானம கூறுவார்?

இப்படி மக்கள் தீர்ப்பை மதிக்காது, எதிர்க் கட்சிகள் ஆக்கம பெறுவதைத் தடுக்கும காங்கிரஸ் செயல் இயற்கை முறை போலும்! இதுமட்டும அறமோ எனக் காங்கிரசுத் தலைவரை நாட்டு மக்கள் கேட்கத்தான் கேட்பர்.

பண்டாரநாயகா ஆட்சியின் சிங்கள வெறிப்போக்கு

கொழும்புத் தமிழர்கள் கிளர்ச்சி

கார்களில் சிங்கள எழுத்துகளை பொறிப்பதற்கு எதிர்ப்பு

கொழும்பு, சன. 8—

'ஸ்ரீ' என்ற சிங்கள எழுத்து பொறிக்கப்பட்ட 'ரிஜிஸ்திரேஷன எண்' கொண்ட கார் ஒனறை நகரத் தமிழர்கள் கண்டதும், இதுபோல சிங்களமயமாக்கும் சர்க்காரின் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், அந்தக் கார்முன் படுத்துக்கொண்டு 'சத்தியாக்கிரகம' நடத்தியிருக்கின்றனர்.

சிறையதிகாரி ஒருவருக்குச் சொந்தமான அந்தக் கார்முன் தமிழர்கள் நடுச்சாலையில் படுத்துக் கொண்டு கிளர்ச்சி செய்திருக்கின்றனர்.

பாஸ்கரன் என்ற ஒரு ஆசிரியர் தலைமையில் அந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்ட தமிழ் வீரர்கள், அந்த அதிகாரியை நோக்கி, 'இந்தக் காரை விடுங்கள்; உங்களின் அலுவல்களைக் கவனிக்க நாங்கள் வேறு கார் தருகிறோம்' என்றும் கூறியிருக்கின்றனர்.

இந்த மறியல் கிளர்ச்சி, இந்தக் கார் வடக்கு மாகாணங்களிலிருந்து வெளியேற்றப்படும்வரை தொடர்ந்து நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பொது வேலைநிறுத்தம்

'யாழ்ப்பாணம் பகுதிகளில், தமிழர் வாழும் பிரதேசம் முழுமையிலும் ஒரு பொது வேலைநிறுத்தம் நடைபெறும் என்ற செய்தி உலவுகிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, சிங்களம் புகுத்தப்படுவதை வன்மையாக எதிர்த்து வருவது தெரிந்ததே! அவர்கள், வரும் ஞாயிறன்று கூடி, இந்தப்புதிய 'பதிவு எண்' முறையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யும் திட்டம் பற்றி பரிசீலித்து முடிவு செய்வர் என்று தெரிய வருகிறது.

சிங்கள எழுத்துடன் கூடிய பதிவு எண் கொண்ட கார் வைத்திருக்கும் தமிழர் வீட்டுமுன் மறியல் செய்வதும், தமிழரசுக் கட்சியின் திட்டங்களுள் ஒன்றாகும்.

யானைக்கால் நோயைக் கட்டுப்படுத்தும் நிலையம்

இந்த ஆண்டில் திறக்கப்படுமாம்

சென்னை, சன. 9—

இந்த ஆண்டில், சென்னை மாநிலத்தில், யானைக்கால் நோயைக் கட்டுப்படுத்தும் 3 நிலையங்கள் திறக்கப்படுமாம்.

இந்த நிலையங்களில் தஞ்சை, திருச்சி, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்கள் பயனடையும்

இந்த நிலயங்கள் ஒவ்வொன்றுக்கும் ஆரம்பச் செலவு ரூ. 22,500-ம், ஆண்டுதோறும் ரூ. 30,000-மும் செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

மேலும், பொதுமக்களுக்கு இலவசமாக 'ஹெட்ரோசன்' என்ற யானைக்கால் தடுப்பு மாத்திரைகள் வழங்கப்படுமாம்.

திருவனந்தபுரம் நகர சபையில்...

உறுப்பினர்களுக்குப் பதிலாக அட்டைகள்!

புதிய தலைவர் தேர்தலுக்கு எதிர்ப்பு

திருவனந்தபுரம், ஜன. 8—

நகர சபைத் தலைவர் (மேயர்) கைது செய்யப்பட்டு சிறையிலிருக்கும்போது, வேறு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக கூட்டப்பட்ட நகர சபைக் கூட்டத்தை, கட்டுப்பாடாக அத்தனை உறுப்பினர்களும் பகிஷ்கரித்திருக்கின்றனர்.

மேலும், உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வராதது மட்டுமல்ல—தங்களுக்குப் பதிலாக ஒவ்வொருவரும், '144 சட்டம் ஒழிக,' 'உயர் நீதிமன்ற போராட்டம் வெல்க' என்பன போன்ற வாசகங்கள் எழுதிய அட்டைகளை தங்கள் தங்கள் நாற்காலிகளில் 'உட்கார்த்தி' வைத்து விட்டிருந்தனராம்!

40 உறுப்பினர்களில் ஒருவர் கூட வரவில்லையாம்!

நகரசபை அதிகாரி இந்தக் காட்சியை அரை மணி நேரம் வரை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, மண்டபத்தை விட்டு வெளியேறிச் சென்றுவிட்டாராம்!

பொன்னர ஸ்ரீதர் என்ற மேயர், இப்போது திருவனந்தபுரத்தில் உயர் நீதிமன்றக் கிளை நிரந்தரமாக நிறுவப்பட வேண்டும் என்ற கிளர்ச்சியில் ஈடுபட்டு சிறைப்பட்டிருக்கிறார் என்றாலும், புதிய 'மேயர்' தேர்ந்தெடுக்கப்படும்வரை அவரே மேயராக இருப்பார் என்று தெரிகிறது.

இனவெறியின் உச்சநிலை!

பல்கலைக் கழகங்களிலும் துதலைகாட்டுகிற

கேப்டவுன், சன. 9—

எல்லாத் தென் ஆப்பிரிக்கப் பல்கலைக் கழகங்களிலும் இன ஒதுக்கல் சட்டத்தை அமுலாக்க வேண்டுமென்ற மசோதா பாராளுமன்றத்தில் முனமொழியப்பட்டு விவாதிக்கப்பட்டுள்ளது.

இனி வெள்ளையருடன் கருப்பர்களும் இந்தியர்களும் கலந்து படிக்க முடியாதவாறு இந்தச் சட்டம் வழிசெய்வதால், தனித் தனிப் பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட வேண்டியதாகிறது.

பாதரட்சைத் தொழில் நுட்பப் பயிற்சி

சென்னையில் மத்திய நிலையம் நிறுவப்படுமாம்

புதுடில்லி, சன. 8—

சிறு தொழில்கள் அபிவிருத்தித் திட்டங்களை அமுல் நடத்துவதற்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளில் ஒன்றாக சென்னையில், பாதரட்சைத் தொழில் நுட்பப்பயிற்சி மத்திய நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றனவாம்.

சென்னை-சூளை வ.பு.அ.சௌந்திரபாண்டியனுர் நினைவுப் படிப்பக ஆண்டுவிழா

பொதுச்செயலாளர், என். சீவரத்தினம், சத்தியவாணிமுத்து கலந்துகொண்டனர்

தேர்தல் நிதிக்கு அன்புக் காணிக்கை

சென்னை, சன. 9—

நேற்று மாலை 6 மணியளவில், சென்னை—சூளை வ. பு அ. சௌந்திரபாண்டியனுர் நினைவுப் படிப்பக 4-வது ஆண்டு விழா'வும் தி. மு கழகத் தேர்தல் நிதி அளிப்பு விழாவும், படிப்பகத்திற்கு அருகில் (ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெரு, சூளை மில் பின்புறம்) தோழர் எம் எஸ் சின்னசாமி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத் துவக்கத்தில் தோழர் இராதாமாணிக்கம், மற்றும் பல தோழர்கள் இயக்கப் பாடல்கள் பாடினர்.

தலைவரது துவக்கவுரைக்குப் பின், தோழர் என் ஜீவரத்தினம் அவர்கள், மக்களை நம்பி தி. மு கழகம் தேர்தலில் ஈடுபடுகிறதென்றும், மக்கள் தி. மு. கழகத்திற்கு ஆதரவுதர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு சிறிது நேரம் பேசினுர்.

அடுத்துத் தோழர் சொக்கலிங்கம், படிப்பகத்தின் ஆண்டறிக்கையை வாசித்தார். அவர், படிப்பகம் இரவுப் பள்ளி நடத்தி அப்பகுதி சிறுவர்களுக்கு நல்ல பயிற்சி அளிப்பதாகவும், அப்பகுதியில் போட்டியிடும் தி. மு கழக அபேட்சகருக்குப் படிப்பகம் தனது முழு ஆதரவையும் தரும் என்றும் தெரிவித்துக்கொண்டார்.

அடுத்து, படிப்பகச் சார்பில் நடைபெறும் இரவுப் பள்ளியில் படிக்கும் கஜேந்திரன் எனும் இளைஞன், அப்பள்ளி சிறுவர்கள் சார்பில் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக 101 காலணுக்கள் கொண்ட பண முடிப்பைப் பொதுச்செயலாளரிடம் கொடுத்தான்.

பொதுச்செயலாளர் அவர்கள் உவகை பொங்க மனமுவந்து அம்முடிப்பினை ஏற்றுக்கொண்டார்.

பொதுச்செயலாளர் அவர்களிடம் அந்தப் பண முடிப்பைக் கொடுக்கும்போது அவ்விளைஞன், 'தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கென நாங்கள் தருகிற இந்த 101 காலணுக்களையும் 101 ரூபாயாக நினைத்துப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்' என்றதும், கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களும் மகிழ்ச்சிப் பெருக்கால் பெருத்த ஆரவாரஞ் செய்தனர்.

பொதுச்செயலாளர் அவர்களுக்கும், தோழர் என். ஜீவரத்தினம் அவர்களுக்கும் அம்மாணவன் கைத்தறிக் கைக்குட்டைகள் வழங்கினுன்.

பின்னர், படிப்பகத் தோழர் குமாரவடிவு அவர்களால், படிப்பகச் சார்பில், தி மு. கழகத் தேர்தல் நிதியாகப் பொதுச்செயலாளர் அவர்களிடம் ரூ. 101 தரப்பட்டது

சூளை தி. மு கழகம், முத்தமிழ் மன்றம், சௌந்திரபாண்டியனு' படிப்பகம் ஆகியவை சார்பில பொதுச்செயலாளருக்கும், சௌந்திரபாண்டியனுர் படிப்பகச் சார்பில் தோழர் ஜீவரத்தினத்திற்கும் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

பின்னர், படிப்பகச் சார்பில் விற்கப்பட்ட பொங்கல் விழா வாழ்த்து அட்டைகளின் மூலம் கிடைத்த 5 அணுவும், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கெனத் தரப்பட்டது.

அடுத்து தோழியர் சத்தியவாணி முத்து அவர்கள் சிறிது நேரம் காங்கிரசின் ஒன்பதாண்டு 'சாதனை'யை விளக்கியும், வருகிற பொதுத் தேர்தலில் தாய்மார்கள் இதனை உணர்ந்து செயல்படவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டு சொற்பொழிவாற்றினு'

படிப்பகச் சார்பில், மகளிர் மன்ற வளர்ச்சிக்காகத் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களிடம் ரூ 1 கொடுக்கப்பட்டது.

இறுதியாகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கழகத்தின்மீது மாற்றார் மாசு கற்பிக்க முயற்சித்து வாய்க்கு வந்தபடி பேசித் திரியும் நிலையை விளக்கியும், இவைகளால் எல்லாம் தி. மு. கழகம் தனது கொள்கை கோட்பாடுகளிலிருந்து பின்னடையாது என்று உறுதி கூறியும், தேர்தல் நிதி அளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தும் நீண்ட தோர் உரை நிகழ்த்தினுர்.

சென்னை வி. வி. கோவில் தெருவிலுள்ள தோழர் வி. தீர்த்தகிரி அவர்களால், பொதுச்செயலாளரிடம் தி மு. கழகத் தேர்தல் நிதியாக ரூ 3—3—3 தரப்பட்டது.

பொதுச்செயலாளர் உரைக்குப் பின் தலைவர் முடிவுரை நன்றி கூறலுடன், கூட்டம் சுமார் இரவு 9 மணிக்கு இனிது முடிவுற்றது

கூட்டம் நடைபெற்ற இடம் மிக நெருக்கடியானதாக இருந்த போதிலும்கூட, நாற்புறத் தெருக்களிலும ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு நின்று, அமைதியுடனும் கட்டுப்பாடுடனும் கருத்துரை பெற்றுச் சென்றனர்.

★

கடலூர் நகர தி. மு. கழகக் கிளைகளுக்கு:

''கடலூர் நகர எல்லைக்குள் அடங்கிய கிளைக் கழகங்கள், படிப்பகங்கள் அனைத்தும், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கென இதுவரை வசூலித்துள்ள தொகைகளை உடனடியாக நகரச் செயலாளரிடம் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும் எனது கையொப்பமில்லாமல் நகர எல்லைக்குள் கழகச் சார்பில் எந்தவிதமான நிதி திரட்டுவதாக இருந்தாலும் அது செல்லாது; அப்படி யாராவது செய்வதாக இருந்தால் உடன் எனக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்,''

என்று, கடலூர் நகர தி.மு. கழகப் பொருளாளர் எஸ். அஜீஸ் அறிவிக்கிறுர்.

விதிவிலக்கு அளிக்க அரசாங்கத்தின் மறுப்பு

சிற்றுண்டிச் சாலைகளில், இட்டிலி போன்ற உணவு வகைகளுக்கு மாவு அரைக்கும் இயந்திரங்கள் அமைப்பதற்கு, பொதுச் சுகாதாரச் சட்டத்தின் 92-வது பிரிவிலிருந்து விதி விலக்கு அளிப்பதற்கு சென்னை அரசாங்கம் மறுத்துவிட்டதாம்.

குடியிருக்கும் இடங்களில் புதிய தொழிற்சாலைகள், பட்டறைகள் அமைப்பதை இந்த 92-வது பிரிவு தடை செய்கிறது.

கண்ணதாசன்

நிகழ்ச்சிகள்;

சன. 13 : தியாகராயர் கல்லூரி (சென்னை)
14 : காலை-ஆயிரம்விளக்கு மாலை-பொங்கல் திருநாள்
15 : சென்னை—சூளை
16 : வாலாஜா (நாடகம்)
19 : பெங்களூர் செயின்ட் ஜோசப் கல்லூரி தமிழ்ச் சங்கம்
20 : திருச்சி
27 : அண்ணுமலைநகர்
28 : சீரனூர்

—21-ந் தேதியிலிருந்து திருப்பத்தூரிலேயே தங்குவதால், வேறு இடங்களுக்கு வரஇயலாது.

நெய்வேலியில் தீ விளைவித்த கோரம்

20 குடிசைகள் பாழ்

நெய்வேலி, ஜன. 7—

இங்கு தொழிலாளருக்காக அமைந்துள்ள காலனியைச் சேர்ந்த 20 கூரை வீடுகள் நேற்று பிடித்த தீயில் அழிந்துவிட்டன என்றும், சுமார் ரூ. 1,500 வரை இதனுல் நஷ்டம் என்றும் தெரிய வருகிறது.

நெய்வேலித் திட்ட அதிகாரிகள், உடனே இடத்திற்கு விரைந்து தீயை அணைக்க உதவியதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியும் செய்திருக்கின்றனர்.

'தொழிலாளருக்குத் தொல்லை தரும் சட்டப் பிரிவுகள்'

உடனே திருத்தி அமைக்குமாறு கோரிக்கை

ஓட்டல் தொழிலாளர் சங்கத் தீர்மானம்

திருச்சி, சன. 8—

''ஷாப் சட்டம், பாக்டரிச் சட்டம், சம்பளம் பட்டுவாடா சட்டம்—இவைகளில் உள்ள சில பிரிவுகள் தொழிலாளர்களை மிகுந்த இன்னலுக்குள்ளாக்குவதால் அச்சட்டங்களில் திருத்தம் உடனடியாகத் தேவை.

''ஏற்கனவே சர்க்கார் கூறியவர் திருக்கிறபடி, உடனடியாக விசாரணைக் குழுவும், பிராவிடண்ட் பண்டு, இன்ஷ்யூரன்ஸ் ஆகியவையும் அமுல் நடத்தப்படவேண்டும்.''

மேற்கண்ட இத்தீர்மானங்கள் உள்ளிட்ட 10 தீர்மானங்கள், இங்கு நடைபெற்ற திருச்சி மாவட்ட ஓட்டல் தொழிலாளர் சங்க இரண்டாவது மாநாட்டில் சர்க்காரைக் கேட்டுக்கொண்டு நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

மேலும் அம்மாநாட்டில், மாநிலத் திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களில் வேலை செய்யும் தொழிலாளருக்கான சட்டங்களில் சில பிரிவுகளுக்கு அளிக்கப்பட்டுள்ள விதி விலக்கை உடனடியாக நீக்குமாறும், பஞ்சாலை முக்கூட்டுக் குழுவின் சிபாரிசுகளை உடன் அமுலுக்குக் கொண்டுவருமாறும் சர்க்கார் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

மேற்படி மாநாடு, திருச்சி தேரடிக் கடைத்தெரு பழக்கடை தண்ணீர்ப்பந்தல் சத்திரத்தில் திரு. கே எச். வெங்கட்ராமன் தலைமையில் நடைபெற்றது.

திருச்சி பஞ்சாலைத் தொழிலாளர் சங்கச் செயலாளர் எம். பாலசுப்பிரமணியம் கொடியேற்றுவித்தார். திரு. மு. வேலண்ணு மாநாட்டைத் துவக்கி வைத்தார். சங்கச் செயலாளர் ஆர். சுந்தரராமன் ஆண்டறிக்கை வாசித்தார்.

மேற்படி மாநாட்டையொட்டி அன்று மாலை டவுன் ஹால் மைதானத்தில் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

மாநாட்டில், ஷாப் சட்ட ஆபீசர்களுக்கு (இன்ஸ்பெக்டர்கள்) அதிக அதிகாரம் கொடுத்து, சம்பள உயர்வும் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதுடன், மற்றும் சில அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (க. தி.)

பொதுச்செயலாளர் கருத்துரை:

கபடமற்ற இளைஞர்கள் சேவையைத் தி. மு. கழகம் எதிர்பார்க்கிறது

சீமான்களின் உள்ள உணர்ச்சியுடன் இலட்சியத் தோழர்களின் உள்ளத்தை ஒப்பிட்டு நோக்குகிறது

அன்புக் காணிக்கை தருவோர் ஆர்வம் பற்றி இரா. நெடுஞ்செழியன்

பொதுக்கூட்டத்தில், மேற்படி படிப்பக மாணவன் கஜேந்திரன் கொடுத்த 101 காலணுக்களையும் ஏற்றுக்கொண்ட பொதுச்செயலாளர் அவர்கள் தமது பாராட்டுதலைத் தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார் :—

''இந்தப் பகுதியிலே பொலிவுடனும் வலிவுடனும் அழகுற பாண்டியன் படிப்பகத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் தி. மு. கழகத்தின் நல்ல பல கருத்துக்களையும் குறிக்கோளையும் கொள்கையையும் திட்டங்களையும் இப்பகுதி மக்களிடம் புகுத்திவரும் படிப்பக இளைஞர்களின் ஆர்வத்தையும் உணர்ச்சியையும், எழுச்சியையும் ஊக்கத்தையும் கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

''இங்குள்ள தி. மு கழகக் கிளையுடன் நின்று கழகக் கருத்துக்களை சிரிய பணி மூலம்—இரவுப் பள்ளி அமைத்துச் சிறுவர்களுக்குக் கல்வி புகட்டுவதின் மூலம—படிப்பகத்திற்கு நல்ல பல ஏடுகளையும் நூல்களையும் வாங்குவதின் மூலம் அவர்கள் ஆற்றும் பணிகண்டு பெருமைப்படுகிறேன்; பூரிப்படைகிறேன்.

''திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் நிதிக்கு, ஒவ்வொருவரும் அவரவர் தரத்திற்கேற்ப நிதி தருகிறுர்கள். இந்தக் கூட்டத்தில் படிப்பகம் நடத்திவரும் இரவுப் பள்ளியைச் சேர்ந்த சின்னஞ்சிறு இளைஞன் ஒருவன், அவனுடன் படிக்கும் மாணவர்களிடமிருந்து காலணு அரையாணுவாக வசூலித்து 101 காலணுக்களைத் தேர்தல் நிதியாகக் கொடுத்ததை நீங்கள் கண்டீர்கள்.

''இதே நேரத்தில் ஆட்சிபீடம் ஏறியிருக்கும் ஆளவந்தார்கள், தங்கள் கட்சியின் தேர்தல் நிதிக்காகச் சீமான்களிடம் சென்று நிதி கேட்கிறுர்கள். சீமான்களும் இலட்சத்து ஒரு ரூபாய்—இரண்டு இலட்சம் என்று கொட்டிக் கொடுக்கிறுர்கள். இப்படி அவர்கள் இலட்சம் இலட்சமாக நிதி திரட்டுகிறுர்கள்.

''ஆனுல் நமக்கு இந்த இளைஞன் இன்று 101 காலணு கொடுத்திருக்கிறுன். காங்கிரசுக்கு நிதிகொடுத்த சீமான்களெல்லாம், ஆட்சியின் அதிபதியாக இங்கு இருக்கிற காமராசரிடம் நிதி கொடுக்கும் போது, கள்ளங் கபடமில்லாமல் கொடுக்கமாட்டார்கள் உள்ளத்தில் வேறு வஞ்சக எண்ணங்களுடன் தான்—இதைக் கொடுத்தால் இது கிடைக்குமா? — நாம் காட்டும் புன்சிரிப்பு நம்மை மாடமாளிகை, கூடகோபுரம் இட்டுச் செல்லுமா என்ற எண்ணத்தோடு தான் கொடுப்பார்கள்.

''முத்தையா செட்டியார் காங்கிரஸ் தேர்தல் நிதிக்கு 3 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறுராம்; கோவையிலுள்ள 30,40 - ஆலைச் சீமான்கள் 10 இலட்சம் வரை கொடுத்திருக்கிறுர்களாம்!

''ஆனுல், அவர்களெல்லாம் இதனை உள்ளன்போடு கொடுத்தார்களா? அவர்கள் கொடுத்த இந்தப் பணமெல்லாம் நேர்மையான, நாணயமான முறையில் அவர்களுக்குக் கிடைத்ததல்ல; எத்தனையோ ஏழை மக்களின் வயிற்றைக் கட்டி, அவர்கள் வயிற்றிலடித்து, அவர்களை அழ அழவிட்டு, தவிக்கத் தவிக்கச் செய்து, வஞ்சகமாக அடைத்த பணம்!

''ஆனுல் நாங்கள் எதிர்பார்ப்பது கள்ளங்கபடமற்ற உள்ளத்தை! எதிர்காலப் பணிக்குத் தன்னைத் தயார்படுத்திக்கொள்ளும் இளம் உள்ளத்தை! இந்த 101 காலணுவைக்கொடுத்த இளைஞன் 'இதை 101 ரூபாயாகப் பாவித்து ஏற்றுக்கொள்ளுங்கள்' என்று குறிப்பிட்டான். அல்ல தம்பி; 101 காலணு கொடுத்த உன்னை, காங்கிரசுக்கு இலட்சத்து ஒரு ரூபாய் கொடுக்கும் அந்தச் சீமானின் உள்ளத்துடன் நான் ஒப்பிட்டுப் பார்க்கிறேன்; சீமான் உள்ளத்தின் உணர்ச்சியையும் இளைஞன்

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. க. வில்லை (பாட்ஜ்)

✶

தி. மு. கழகக் கொடி வட்ட வடிவில் (மேற்பாதி கருப்பு—கீழ்ப்பாதி சிவப்பு) பொறிக்கப்பட்டு, அந்த வட்டத்தைச் சுற்றி அமைந்துள்ள வெள்ளை வளையத்தில் மேலே 'தி. மு. க' என்ற எழுத்துக்களும், கீழே 'வருக! வெற்றி தருக!' என்ற சொற்றொடரும் எழுதப்பட்டு, சட்டையில் குத்திக்கொள்வதற்கு ஏற்றவகையில் வில்லை (பாட்ஜ்) தலைமை நிலையத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த வில்லை சாதாரண நாட்களிலும், தேர்தல் காலத்திலும், கழகத் தோழர்களும், தேர்தல் பணியில் ஈடுபடும் தொண்டர்களும் அணிவதற்கு ஏற்றதாகும்.

வில்லையின் விலை அணு 6.

விற்பனைக் கழிவு என்று கிடையாது. வெளியூர்க்கிளைகள்; 25 வில்லைகளுக்குக் குறையாமல் எத்தனை வில்லைகள் வேண்டுமோ, அவ்வளவுக்குரிய தொகையை முன்கூட்டியே தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைத்தால், தலைமை நிலையச் செலவில் அவை அனுப்பிவைக்கப்பெறும்.

'அறிவகம்' சென்னை
24—12—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

இருளில் உலவுவோரே! ஏமாற்றுக்காரர்களே!

உதய சூரியன் கிளம்பிவிட்டான்; ஓடி ஒளிந்துகொள்ளுங்கள்— தப்பித்துக்கொள்ளுங்கள்!

ஈ. வெ. கி. சம்பத் எச்சரிக்கை

“தி. மு. கழகம் நல்ல கட்டுக்கோப்புடன் வலிவு பொலிவுடன், நாட்டிலே நல்லதோர் ஜனநாயகத்தை நிலை நாட்ட முயற்சிக்கிறது. அந்த முயற்சிகளைக் குலைக்கக் காமராசரின் கையாட்கள் பல உருவங்களிலே மக்களை அணுகுகிறார்கள். ஆனால் இதையெல்லாம் கண்டு திராவிட முன்னேற்றக் கழகம் தனது உற்சாகத்தில் துளியும் குறைந்துவிடாது.

“நாம் 150 இடங்களிலே போட்டியிடுவது, இந்தியத் துணைக் கண்ட அரசியலில் புதியதோர் நிகழ்ச்சி! கடந்த 9 ஆண்டுகளிலே எந்த இடத்திலாவது காங்கிரசை எதிர்த்து 150 இடங்களில் போட்டியிட்ட கட்சி எதுவுமே கிடையாது. இன்றும் தி. மு. கழகம் மட்டும்தான் 150 இடங்களில் துணிவுடன் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடுகிறது; நாளையும் அப்படித்தான். எனவே இந்தப் பெருமை, வெற்றிபெறும் வகையில் உருவெடுக்க மக்கள் அனைவரும் பாடுபடவேண்டும்.

“இதுவரையிலும், ‘தேர்தல் நெருங்கிவிட்டது,’ என்று மக்களிடம் கூறிவந்தோம். இப்போது தேர்தல் வந்தேவிட்டது. நாமும் வரவேற்கிறோம். நாமும் நமது பணிகளை விரைவில் துவங்குவோம். மக்களுக்கும் நம்முடைய ஜனநாயகப் பற்றுத் தெரியத்தான்போகிறது.

“அதே நேரத்தில் நாம், ‘இருட்டில் ஒளிந்துகொண்டு நடமாடுவோரே! ஓடுங்கள்! தப்பித்துக்கொள்ளுங்கள்! உதய சூரியன் கிளம்பிவிட்டான்,’ என்று எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்”

இவ்வாறு தோழர் ஈ வெ. கி. சம்பத் அவர்கள், கடந்த 5-ந்தேதியன்று சென்னை—வண்ணையில் நடைபெற்ற இளைஞர் மன்றப் பொதுக்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

“ஒரு நாட்டில் இருக்கிற ஆட்சியை அகற்ற மற்றொரு இயக்கம் இல்லாவிட்டால், ஆட்சியிலிருப்போர் ஆணவத்தின் சிகரத்தில்தான் இருப்பார்கள். இன்று நமது நாட்டில், காங்கிரசைத் தவிர வேறு யார் ஆட்சிபீடம் வர இருக்கிறார்கள் என்று மக்கள் உள்ளத்தில் பயங்கொண்டிருக்கிறார்கள். காங்கிரசை எதிர்த்து 4 இடங்களிலோ, 8 இடங்களிலோ எதிர்த்துப் போட்டியிடும் கட்சிகள்மீது எப்படி மக்கள் நம்பிக்கை வைக்க முடியும்? எனவேதான் கழகம் 150 இடங்களில் போட்டியிடப்போகிறது. தி. மு. கழகம் ஒரு பெரிய இயக்கம்; அது காங்கிரசின் ஆணவத்தை மலையுச்சியிலிருந்து இறக்கிவந்து அடிவாரத்தில் சேர்க்கும் என்ற நம்பிக்கை மக்களுக்கு எழவேண்டாமா?

தீண்ட முடியாத பெருநெருப்பு!

“போன தேர்தலில் காங்கிரசுக்குப் பிரச்சாரம் செய்யவந்தார் நேரு பண்டிதர்; அதற்கு மட்டும் 10 இலட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள்! அதற்கு அடுத்தக் கட்டம்—காங்கிரசின் தேர்தல் நிதிக்குச் சர்க்காரே பணம் ஒதுக்கித் தரவேண்டும் என்ற நிலை! இதையெல்லாம் தட்டிக் கேட்க ஆள் இல்லை; அப்படி இருந்தாலும் மாணிக்கவேலர்களாக மாறிவிடுகின்றனர்! இப்படி இருக்கும்போது நாட்டில் ஒழுங்கான ஆட்சியை எப்படிக் காணமுடியும்? இதையெல்லாம் நாம் கேட்பதால்தான் தி. மு. கழகம் நெருங்க முடியாத நெருப்பாக, தீண்ட முடியாத பெருநெருப்பாகக் காணப்படுகிறது காங்கிரசாருக்கு!

மக்கள் மனப்பண்பை உணராதவர்கள்!

“இவர்களிடம் என்ன இருக்கிறது? பணம் இருக்கிறதா? இல்லை; ஆனால், எங்களிடம் நிறைய பணம் இருக்கிறது; அதை வைத்து இவர்களை முறியடிப்போம் என்று காங்கிரஸ்காரர்கள் நம்மை மிரட்டுகிறார்கள். ஆனால், பரிதாபம்! பணத்தைக் கண்டு சொக்கிப்போகும் மக்கள் இப்போதில்லை என்பது அவர்களுக்குத் தெரியவில்லை; பணத்தின் பலத்தை வைத்துக்கொண்டு எதை எதிர்பார்க்கிறார்களோ அதில் தோல்வி அடைவோம் என்று அவர்கள் நினைக்கவில்லை.

காசில்லை—மாசில்லை! பணமுண்டு—குணமில்லை!

“ஆனால், நம்மிடமும் பணமில்லை. அண்ணா அவர்கள்கூட ஒரு கூட்டத்தில் சொன்னார்கள்—‘எங்கள் கழகத்திலே ஒரு இலட்சம் ரூபாயை ஒரே சமயத்தில் பார்த்தவர் நண்பர் நடராசன் மட்டும்தான்’ என்று! எப்படித் தெரியுமா? கடந்த மாநில மாநாட்டில் வசூலான ஒரு இலட்சம் ரூபாயையும் வைத்திருந்த பெட்டியை அவர்தான் எடுத்துவந்தார்! இப்படி நம்மிடம் காசு இல்லை; உள்ளத்தில் மாசு இல்லை! காங்கிரசில் பணம் இருக்கிறது; ஆனால் குணம் இல்லை!

கருத்துடன் உழைக்கும் கழகத் தோழர்கள்

“நம்மிடம் காசு இல்லை என்றாலும் மாசு இல்லை என்பதை நாட்டைச் சுற்றிப் பார்த்து வந்து கூறுகிறோம். ஒவ்வொரு தொகுதிவாரியாகச் சென்றிருந்தோம்; அங்கங்கே உள்ள கழகத் தோழர்களை அனைவரிடத்திலும் அருமையான குடியரசு மனோபாவத்தைக் கண்டோம். கழகத் தோழர் தேர்தலில் தோல்வி அடைவார் என்று தெரிந்தாலும்கூட, ‘இந்தக் காங்கிரசாரை சும்மாவிடக்கூடாது’ என்று ஆர்வத்துடன் உழைக்கும் தோழர்களைக் கண்டோம்.

“தேர்தலில் வெற்றியா தோல்வியா என்பதை அறிவிக்கும் நேரம் வரையில் எதிர்த்துப் போட்டியிட்டக் காங்கிரஸ் உறுப்பினரைத் துரும்புபோல் இளைத்தாக வேண்டும் என்ற கருத்தில் உழைக்கும் கழகத் தோழர்களைக் கண்டோம். இப்படி நமது கழகத் தோழர்களிடத்தில் சனநாயக மனோபாவம் பரிணமித்துக்கொண்டிருக்கிறது.

ஆள்தேடும் படலம்!

“ஆனால் காங்கிரசில் இன்றுநிலை என்ன? எந்தத் தொகுதியிலாவது கழகத் தோழர் போட்டியிடுகிறார் என்றால், அவரை எதிர்த்துப் போட்டியிடக் காங்கிரசில் ஆள் கிடைக்கவில்லை! காமராசர் ஒவ்வொருவரிடமாகச் சென்று போட்டியிடும்படி கேட்கும்போது அவர், ‘வீணாக அரசியலில் கலந்து கொள்ள எனக்கு விருப்பமில்லை’ என்று அவர்கள் தட்டிக்கழித்துவிடுகிறார்கள். காங்கிரஸ் நின்றால் தோற்றுவிடும் என்று சாடைமாடையாகத் தெரிந்தால்கூடப் பேச்சுமூச்சைக் காணோம்! மந்திரிகளெல்லாம் ஓடி ஓடிப் பலாத்காரமாக ஆளைப்போடுகிறார்கள்!

இவர்கள் இலட்சணம் இவ்வளவுதான்!

“இன்றுவரை காங்கிரஸ் அபேட்சகர்களின் பட்டியலைக் காணோம். கடந்த நவம்பரில் வெளியிடுவார்கள் என்று எதிர்பார்த்தோம்—வரவில்லை; டிசம்பரும் கடந்தது—வரவில்லை; ஜனவரியிலாவது வரும் என்று நினைத்தோம்—இன்னும் வரவில்லை. மற்ற இடங்களில் எல்லாம் காங்கிரஸ் அபேட்சகர்கள் பட்டியல் வந்துங்கூடத் தமிழ்நாட்டில் இன்னும் வரவில்லை; ஏன்?

“ஒரு தொகுதியில் 3, 4 பேர் காங்கிரஸ் சார்பில் போட்டியிட விண்ணப்பம் கொடுக்கிறார்கள். காங்கிரஸ் சார்பில் போட்டிக்கு நிற்பதாக விண்ணப்பம் கொடுக்கும் அந்த நால்வரும் நடுத்தெருவில் ஒருவருக்கொருவர் தெரியாமல் மக்களிடத்தில் வந்து, என்ன சொல்கிறார்கள்?—நான் காங்கிரஸ் சார்பில் நிற்க விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன்; என்னை எடுத்தால் ஆகசு—இல்லையென்றால் பயப்படாதீர்கள்—என்னால் ஆனவரை காங்கிரசைத் தோற்கடிக்கப் பாடுபடுகிறேன்,’ என்று கூறுகின்றனர். ஆகவேதான், இன்னமும் பட்டியலைக் காணோம் அபேட்சகர்கள் பட்டியலை வெளியிட்டவுடனே 4 பேர்களில் 3 பேர் கங்கணம் கட்டிக்கொண்டு அந்த அபேட்சகரை எதிர்க்க வேலை செய்வார்கள்; அது வரையிலும் அவர்கள் 4 பேரும் பதுங்கிப் பதுங்கித்தான் இருப்பார்கள். இந்த வகையில் காங்கிரஸ் இன்று கலை தடுமாறிக்கொண்டிருக்கிறது.

அமைச்சர்கள் சிந்தனை செல்லும் மார்க்கம்!

“இன்றுள்ள எந்தக் காங்கிரசாருக்கும் சிறிதளவுகூட ஸ்தாபன உணர்வு கிடையாது. எங்காவது ஒருவர் வெற்றி பெற்றாலும் அவரைப் பற்றிக் காமராசர் உள்ளமும், சுப்பிரமணியம் உள்ளமும், பக்தவத்சலம் உள்ளமும் வேறு வேறு முறையில் சிந்தித்துக் கொண்டிருக்கும். ‘இவர் வெற்றி பெற்றால் என் பக்கம் இருப்பாரா, அல்லது சுப்பிரமணியம் பக்கம் இருப்பாரா?’ என்று காமராசர் சிந்தித்துப் பார்ப்பார்! ஒவ்வொருவரும், காங்கிரஸ் உறுப்பினர் பெறும் வெற்றி தனது வெற்றியாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்! சுப்பிரமணியத்தின் வெற்றி என்று காமராசர் நினைத்தால் ‘காங்கிரஸ் தோற்றுப் போவதே மேல்’ என்று நினைத்துக் கொள்கிறார். ஏதாவது மோசமான தொகுதி என்றால் அங்கே பெண்களைப் போடுவார்; அல்லது ஏதாவது ஒரு அரசியல் தியாகியைப் போடுவார். அவர்களையெல்லாம் பலம் வாய்ந்த தொகுதிகளில் மனப்பூர்வமாக நிறுத்த இவர்களுக்கு தைரியமே கிடையாது!

“இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் தக்க பாடம் புகட்ட இது அருமையான காலம்! இந்த நேரத்தில் தக்க பாடம் கற்பிக்காவிட்டால், மேலும் என்னென்ன தொல்லைகளையெல்லாம் இந்த நாட்டு மக்கள் அனுபவிக்கப் போகிறார்களோ?”

பார்க்பேர் பொருட்காட்சி: 56-57

சென்னை S.I.A.A. திடலில்: 11-1-57 மாலை 6-30மணிக்கு

திறந்தவெளி சகுந்தலா கலை அரங்கில்

திரு சி. வி. திருவேங்கடம் எம் சி தலைமையில்

குமாரி குசலகுமாரி

பரதநாட்டியம் & ஓரியண்டல் நடனம்

தனிப்பகுதி: ரூ. 3, 2, 1. அணா 8. திறந்த வெளி இலவசம்

சென்னை கவர்னர் உயர்திரு ஏ ஜே ஜான் அவர்கள் பாராட்டிய உஷா வீணை வாத்தியம், சர்க்கஸ், தந்திரக்காட்சி. ஓவியக்கலை, பம்பாய் நடனம், பொம்மலாட்டம், இராட்டினம், மயில் தஞ்சாவூர் குதிரைகள் நாட்டியம், மறுபிறவி மகாத்மா காந்தி, தேகப் பயிற்சி சைக்கிள் விளையாட்டு—மற்றும் பல. பிரவேசக் கட்டணம் 0—5—0

எம். எஸ் மோகன்—காண்டிராக்டர்

12-1-57 வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு

சிவாஜி கணேசன் அளிக்கும் ‘பராசக்தி’

கிருஷ்ணராஜ் & குழுவினர் அளிக்கும் ‘மரணமூச்சு’

சென்னையில் சிறப்புக் கூட்டம்

★

அண்ணா, நெடுஞ்செழியன் பேசுவர்

13—1—57 ஞாயிறன்று காலை 9-மணியளவில், சென்னை—கோகலே மண்டபத்தில், நண்பர் சங்கத்தின் சார்பில் சிறப்புக்கூட்டம் ஒன்று நடைபெறும்.

அண்ணா அவர்கள் ‘தேவலோகத்தில் சில காட்சிகள்’ எனும் பொருள் பற்றியும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ‘பண்டைத் தமிழகத்தில் சில காட்சிகள்’ எனும் பொருள் பற்றியும் பேசுவர்.

பொதுச்செயலாளர் கருத்துரை

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

உள்ளத்தில் எழும் உள்ளன்பையும் எடைபோட்டுப்பார்க்கிறேன். எங்களுக்குப் பணம் பெரிதல்ல!

“திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால் ஆர்வம் கொண்டவர்கள் அன்பின் காணிக்கையாகத் தேர்தல் நிதி தருகிறார்கள். இது அவர்கள் தி. மு. கழகத்தின்மீது அவர்கள் கொண்டிருக்கிற ஆர்வத்தைக் காட்டுகிறது எனவே அவர்கள் தரும் பணத்தின் மதிப்பை நாங்கள் கணக்கிடவில்லை. ஆலைத்தொழிலாளர்கள் இத்தகு உணர்ச்சியுடனும், கட்டினவ்யாளைகள் வீர உள்ளத்தோடும் நேர்மையோடும் நாணயத்தோடும் நல்ல மனதுடனும் நிதி திரட்டித் தருகிறார்கள்.”

[பேச்சு முடியவில்லை; நாளையும் வெளிவரும்]

தெ. ஆ. இந்தியர் படும் அவதி!

ஐ. நா. தீர்மானம்

நியூயார்க், ஜன. 8—

தென்னாப்பிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் ஆகியவை, தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்தியர் பிரச்சினை குறித்து ஆராய்வதற்காக ஒன்றுகூடிப் பேசவேண்டுமென ஐ. நா. பொதுச் சபையில் தீர்மானம் ஒன்று வந்துள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தத் தீர்மானத்தை அர்ஜெண்டைனா, சிலி, பூகோ, மெக்சிகோ முதலியவை கொண்டுவந்திருக்கின்றன.

தேர்வுக் குழு சுற்றுப்பயணம்

★

திருச்சி மாவட்டம்:

தி. மு. கழக அபேட்சகர் தேர்வுக் குழு உறுப்பினர்களான தோழர்கள் என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகிய இருவரும் மாவட்டச் செயலாளர் அம்பில்-தருமலிங்கம் அவர்களுடன் 12-1-57 காலை 10 மணிக்கு திருச்சி நகர் கிலேதார் வீதி, 9-வது எண்ணுள்ள கட்டிடத்தில், கரூர், குளித்தலை, வாளாடி, மணப்பாறை, பஞ்சாப்பட்டி, பெரம்பலூர் (பொது), ஜெயங்கொண்டம், அரியலூர், திருமயம் ஆகிய தொகுதிகளுக்கு அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபடுவார்கள்.

குறிப்பு:— மேற்கண்ட தொகுதிகளிலுள்ள கிளைக் கழகச் செயலாளர்களும் கழக முக்கியஸ்தர்களும், தேர்தலுக்கு நிற்க விருப்பம் தெரிவித்துள்ள அபேட்சகர்களும் குறிப்பிட்ட நேரத்தில் வந்து காணுமாறு அபேட்சகர் தேர்வுக் குழுவால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மு. கருணாநிதி சுற்றுப்பயணம்

ஜன. 11: குமாரபாளையம் (சேலம்)
12: கோவை
13: காலை – புதுக்கோட்டை
மாலை—தஞ்சை
இரவு—நாடகம்
14: செம்பியமாதேவி (தமிழர் திருநாள்)
16-17: கோவை—சேலம் மாவட்ட தேர்வுக் குழு சுற்றுப்பயணம்
18: கடலூர்
19: வளவனூர்
20: திருவாரூர் ஆசிரியர் மாநாடு.
மாலை—அம்மையப்பன்
24: புதுவலசு
27: நாகை

வட சென்னை தமிழர் முன்னணி திறப்பு விழா

11-1-57 மாலை 6-மணிக்கு வண்ணை, எம். சி. ரோடு, நகரசபை (சுழல மெத்தைக்கு அருகில்) திரு. பி: இராமசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் கி ஆ. பெ. விசுவநாதம், காஞ்சி-கல்யாணசுந்தரம், கே. அர்ச்சுனன், வெ. அரசு, எஸ். கே. தனுஷ்கோடி பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.